

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (06.08.2024) இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி வட்டம் சத்திரக்குடி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், 14 கிமி தூரம் 10 கிராமம் வழியாக நடந்து வந்து திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது "இதயம் காப்போம் திட்டம் கீழ் பயனாளி தொலைபேசி மூலம் அழைத்து நலம் விசாரித்தார், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, திட்டம் உயிரை காப்பாற்றியதற்கு நன்றி தெரிவித்தார்கள். இந்நிகழ்வின் போது பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் உடன் இருந்தார்.



ஐ.டி.ஐ.ல் பயிற்சி முடித்த 2310 மாணவர்களுக்கு பணியமர்வு ஆணைகள் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். இந்தநிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் கொ.வீரராகவராவ், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் எ.சுந்தரவல்லி, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6வது நினைவு நாள்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி!

### தொழிலாளர் அணித் தோழர்களுக்கு – தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் வேண்டுகோள்!

சென்னை, ஆக.7

தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக - சொற்பொழிவாளராக திரைக்கதை வசனகர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழ்நாட்டில் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழ்நாட்டின் வரலாற்றில் தமக்கென்று பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6வது நினைவு நாளான இன்று (ஆகஸ்ட் 7, புதன் கிழமை) காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திட தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள "அமைதிப் பேரணி"யில் தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள், அனைத்து மாவட்டத்திலுள்ள தொழிலாளர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களும் மற்றும் தொழிலாளத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்திட வாரீர் என அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள் !

## பம்மல் தெற்கு பகுதியில் நினைவஞ்சலி ! 1000 பேருக்கு அறுசுவை உணவு!

### வே.கருணாநிதி தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை ஆக:7

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பம்மல் தெற்கு பகுதியில் பகுதிச் செயலாளர்,மண்டல குழு தலைவர் வே. கருணாநிதி தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலிசெலுத்தி ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ( இன்று 0708 2024 புதன்கிழமை ) காலை பம்மல்இரட்டை பிள்ளையார் கோவில் அருகில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்1 குழுத் தலைவர்பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி தலைமையில்

பகுதி கழக நிர்வாகிகள் ப.காளேஸ்வரன்,ஆர்.உமா சங்கர், என்.பன்னீர்செல்வம், துரை.இளங்கோவன், பா.கவிதா, பா.டில்லி,பி.ஜே.வேந்தன், இரா.கந்தவேலு, என்.கே.ரவிச்சந்திரன், சு.மனோகர் ஆகியோரது முன்னிலையில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தி 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

இதில் வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,மாவட்டமாநகர பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள்,கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர்பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கழகத் தலைவர் தலைமையில் கலைஞர் 6 வது நினைவு நாள் அமைதி பேரணி!

## சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்பீர்!

### மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஆக. 7

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 வது நினைவு நாளை முன்னிட்டு கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் இன்று (7.8.2024 புதன் கிழமை) காலை 7 மணிக்கு, சென்னை அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்படுகிறது. எனவே அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணிக்குட்பட்ட மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக, கிளை அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கழகத் தலைவர் தலைமையில் அமைதிப் பேரணி!

## தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதியினர் திரளாகப் பங்கேற்பீர்!

### பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, ஆக. 7 -

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. , மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. அறிக்கை வருமாறு:

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 6 வது நினைவு நாளை முன்னிட்டு கழக தலைவர் அவர்கள் தலைமையில் இன்று (7.8.2024) காலை 7 மணிக்கு சென்னை, அண்ணாசாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடம் வரை அமைதி பேரணி நடைபெறவுள்ளது. இதில் சென்னை தென்மேற்கு மாவட்ட தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொண்டு அமைதி பேரணியில் பங்கேற்க வேண்டும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி காலை 11 மணியளவில் முத்தமிழறிஞ ர்கலைஞர் அவர்களின் புகழுக்கு புகழ்சேர்க்கும் ம்வகையில், சென்னை தென்மேற்கு மாவட்ட தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதிக் குட்பட்ட அனைத்து வட்டங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை மலர்களால் அலங்கரித்து கழகத்தினர் அனைவரும் மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அனைத்து வட்டங்களிலும் சுமார் 10000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### எஸ்.பாஸ்கர் எம்.சி - வி.குமார் - ஜி.தண்டபாணி - ஆர்.விஜயராமகிருஷ்ணன் தலைமையில்

## தியாகராயர்நகர் 130 வது வட்டத்தில் அறுசுவை உணவு!

### வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் அறிக்கை!

சென்னை, ஆக். 7

தியாகராயர் நகர் மேற்கு பகுதி, 130 வது வட்டக் கழகச் செயலாளர் டி. கமல் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்கு பகுதி, 130 வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆலோசனைப்படி, இன்று (7.8.2024 புதன்கிழமை) காலை 10 மணிக்கு, அழகிரி நகர் பிரதான சாலையில் உள்ள வட்டக் கழக அலுவலகத்தில் வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் தலைமையிலும், கங்கையம்மன் கோயில் தெருவில் மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கர் தலைமையிலும், வடபழனி ஆண்டவர் கோயில் தெருவில் வட்டக் கழகப் பொருளாளர் வி.குமார், பகுதிப் பிரதிநிதி கள் ஜி.தண்ட பாணி, ஆர்.விஜயராம கிருஷ்ணன் ஆகியோர் தலைமையிலும் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் எம்.பழனிகிராமணியார், என். இராமகிருஷ்ணன், வி. மணி, என்.சுந்தரம், ஜி.ஜி. சேகர், எஸ்.ஆனந்தன், ஏ. கே.காசிம், பில்டர் கே.சரவணன், தமிழ் எம்.பழனி, எஸ்.சரவணன், கே.பாபுஜி, எஸ்.விஜயலட்சுமி, ஆர். சதாசிவம், ஆர்.வி.ரத்தின சாமி, சி.சுந்தர், எம். சுரேஷ், இ.ஜெயக்குமார், குழந்தை வேலு, எல். கணேஷ்,

டி.ஜி.சினிவாசன், எம். கிருஷ்ணன், பி.ஸ்ரீதர், சி. மகேஷ், ஆர்.மணி, ஜெயச் சந்திரன், ஜி.பழனி, அஜ்மல் கான், வி.ஹரி, சி.எஸ்.அசோகன், ஜெனித்தா, டி.சித்ராதேவி, விஜயலட்சுமி, குமார், செல்வி மற்றும் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 130 வது வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள ஆட்சேபணையற்ற குடியிருப்புவாசிகள் அனைவருக்கும் பட்டா வழங்கும் திட்டம் குறித்து தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், வருவாய் அலுவலர்கள் ஆர்.ஐ.கிராம நிர்வாக அலுவலர்கள், வி.ஏ.ஒ. ஆகியோருடன் ஆலோசித்து, கணக்கெடுக்கும் பணிகளை துரிதப்படுத்தினார். உடன் சி.சுரேஷ் எம்.சி. உள்ளார்.


